**தலைப்பு 182 - வெளிநாட்டு தொழில்வாய்ப்பு அமைச்சு தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை– 2016 ஆம் ஆண்டு**

---

தலைப்பு - 182 - வெளிநாட்டு தொழில்வாய்ப்பு அமைச்சின் 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி அறிக்கைகள், இணக்கக் கூற்றுக்கள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகள் என்பவற்றை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் என்பன இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2017 ஆகஸ்ட் 08 ஆந் திகதி அமைச்சின் செயலாளருக்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள், காண்புகள் என்பன கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக்கூற்றுக்கள் தொடர்பான மீளாய்வு, கொடுக்கல் வாங்கல் மாதிரிகள் மீதான தெரிவுச் செவ்வை பார்த்தல் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அம் மீளாய்வினதும் செவ்வைபார்த்தலினதும் நோக்கெல்லை, பரப்பு என்பன எனக்கு கிடைக்கப்பெற்றுள்ள பதவியணியினர், ஏனைய வளங்கள், காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வினை மேற்கொள்ளக் கூடியவகையில் தயாரிக்கப்பட்டதாகும்.

## 1.2 கணக்குகள் மற்றும் இணக்கக் கூறறுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பு

---

ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக்கூற்று என்பவற்றை இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச் சட்டஏற்பாடுகள், பொது நிதி மற்றும் நிர்வாக ஒழுங்குவிதிகள் என்பவற்றிற்கு இணங்க பேணுதல், தயாரித்தல், நியாயமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதம கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும். மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட கணக்குகளையும் இணக்கக் கூற்றுக்களையும் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், அமுலாக்குதல், செயற்படுத்துதல் என்பன இந்த பொறுப்பில் உள்ளடங்குகின்றன.

## 2. கணக்குகள்

---

## 2.1 ஒதுக்கீட்டுக் கணக்கு

---

**மொத்த ஏற்பாடும் செலவினமும்**

---

அமைச்சிற்காக மேற்கொள்ளப்பட்டிருந்த ரூபா 1,143.81 மில்லியன் மொத்த தேறிய ஏற்பாட்டில் மீளாய்வாண்டின் இறுதி வரையில் ரூபா 1,069.21 மில்லியன் தொகை பயன்படுத்தப்பட்டிருந்தது. இதன் பிரகாரம், அமைச்சின் தேறிய ஏற்பாடுகளில் சேமிப்புக்கள் ரூபா 74.60 மில்லியன் அதாவது தேறிய ஏற்பாட்டில் 6.52 சதவீதமாக இருந்தது. விபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| தலைப்பு | 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறானது | | | தேறிய ஏற்பாட்டின் சதவீதமாக சேமிப்புக்கள் |
|---|---|---|---|---|
| | தேறிய ஏற்பாடு | பயன்பாடு | சேமிப்புக்கள் | |
| | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | |
| மீண்டெழுபவை | 619.36 | 593.45 | 25.91 | 4.18 |
| மூலதனம் | 524.45 | 475.76 | 48.69 | 9.28 |
| மொத்தம் | **1143.81** | **1069.21** | **74.60** | **6.52** |

## 2.2 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள்

### பாராளுமன்றத்தால் அனுமதிக்கப்பட்ட எல்லைகள்

அமைச்சிற்குரிய 18201 ஆம் விடய இலக்கத்தின் கீழ் அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கிற்காக பாராளுமன்றத்தினால் விதிக்கப்பட்ட எல்லைகள் மற்றும் உள்ளபடியான பெறுமதிகள் கீழே காண்பிக்கப்பட்டுள்ளன.

| செலவினம் | | பெறுவனவுகள் | | வரவு மீதி | |
|---|---|---|---|---|---|
| ஆகக் கூடிய எல்லை | உள்ளபடியானது | ஆகக் குறைந்த எல்லை | உள்ளபடியானது | ஆகக் கூடிய எல்லை | உள்ளபடியானது |
| ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் |
| 25.00 | 18.34 | 6.00 | 12.10 | 50.00 | 31.35 |

## 2.3 கணக்காய்வு அவதானிப்புகள்

வெளிநாட்டு தொழில்வாய்ப்பு அமைச்சின் 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணைக்கக் கூற்றுக்கள் மேற்படி 1.1 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டதன் பிரகாரம் முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கைகளில் குறிப்பிடப்பட்ட கணக்காய்வு அவதானிப்புகளுக்கு உட்பட்டு திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டிருந்தன. அம் முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கைகளில் உள்ளடக்கப்பட்ட அவதானிப்புகளிலிருந்து பொருண்மையான மற்றும் முக்கியத்துவமான கணக்காய்வு அவதானிப்புகள் 3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ளன.

## 3. பொருண்மையான மற்றும் முக்கியத்துவமான கணக்காய்வு அவதானிப்புகள்

### 3.1 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பான இணக்கக் கூற்று

விடய இலக்கம் 18201 கொண்ட அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பான 2016 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறான இணக்கக் கூற்று தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட பரிசோதனையின் போது அத் திகதியில் உள்ளவாறு அறவீடுகள் நிலுவையாகக் காணப்பட்ட ஊழியர் கடன் மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 1,124,384 ஆக இருந்தது. அதில் ரூபா 226,210 தொகை 01 ஆண்டு முதல் 03 ஆண்டுகள் வரை வரையான காலமாக இருந்து வந்த போதிலும் அம்மீதிகளை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.2 சொத்துக்கள் முகாமைத்துவம்

**விளைவற்ற மற்றும் குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்**

(அ) 2012 நவம்பர் 20 ஆந் திகதிய PFD/ASD/ Veh/பொது/06 ஆம் இலக்க அரச நிதித் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தின் கடிதம் மூலம் அமைச்சிற்குரிய வாகனமொன்று தொடர்பாக ஏலத்தில் விற்பனை செய்யும் செயற்பாட்டை துரிதமாக மேற்கொள்ள வேண்டுமென குறிப்பிடப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் அவ்வாகனத்திற்கான ஏலவிற்பனைச் செயற்பாடு 2017 யூலை 17 ஆந் திகதி வரையிலும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஆ) புலம்பெயர் தொழிலாளர் தொடர்பான குடும்பங்களின் விபரங்களை தொகுத்து கணனி மயப்படுத்தி தரவு முறைமையான்றை பேணுதல் மற்றும் நாளதுவரையாக்குவதனை நோக்கமாகக் கொண்டு 2016 திசெம்பர் 06 ஆந் திகதி 242 கணனிகள் ரூபா 29,995,900 இற்கு கொள்வனவு செய்யப்பட்டு பிரதேச செயலகங்களுக்கு வழங்கப்பட்டு 06 மாதங்களுக்கு மேற்பட்ட காலம் கடந்திருந்த போதிலும் அத்தகவல் முறைமை செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை.

### 3.3 செயலாற்றல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2016 சனவரி 05 ஆந் திகதிய 2016/01 ஆம் இலக்க அமைச்சு செயலாளரின் சுற்றறிக்கை மூலம் 2016 ஆம் ஆண்டில் வெளிநாடு சென்ற தொழிலாளர்களின் எண்ணிக்கை தொடர்பான தகவல்களைப் பெற்றுக்கொள்ளும் வேலைத்திட்டம் 2016 சனவரி 08 ஆந் திகதி முதல் 14 ஆந் திகதி வரை வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சின் மூலம் செயற்படுத்தப்பட்டதுடன் அதன் விளம்பர நடவடிக்கைகளுக்காக இலத்திரனியல் ஊடகம் மற்றும் சுவரொட்டிகளுக்காக இலங்கை வேலைவாய்ப்பு பணியகம் ரூபா 8,284,964 தொகை செலவிட்டிருந்தது. 2016 ஆம் ஆண்டு வரை வெளிநாடு சென்ற தொழிலாளர்கள் 20 இலட்சம் அளவில் இருந்த போதிலும் அக்காலப்பகுதி வரையிலும் ‘‘சிரம சுரக்கும்’’ இன் கீழ் பதிவு செய்யப்பட்டிருந்தவர்களின் எண்ணிக்கை 2 இலட்சத்திற்கும் மேற்பட்டதாக இருந்ததுடன் அது 10 சதவீதமான குறைந்த சதவீதத்தைக் கொண்டிருந்தது.

(ஆ) 2016 நவம்பர் 09 ஆந் திகதிய அமப/16/2048/741/011 ஆம் இலக்க அமைச்சரவத் தீர்மனத்தின் பிரகாரம் அரசின் துரித சலுகை நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் அறிமுகப்படுத்தப்பட்ட புலம்பெயர் ஊழியர்களுக்கான ஓய்வூதிய முறைமை நிர்ணயிக்கப்பட்ட 2017 யூலை 17 ஆந் திகதி வரையிலும் ஆரம்ப வரைவு ஆரம்ப கட்டத்தில் காணப்பட்டமை அவதானிக்கப்பட்டது.

### 3.4 அதிகாரமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

அமைச்சிற்குரிய 06 வாகனங்களுக்காக கொள்வனவு செய்யப்பட்டிருந்த 31 உதிரிப் பாகங்களுக்காகவும் 07 வாகனங்களின் ரூபா 2,187,665 ஆன திருத்த செலவினங்களுக்குரியதாக கழற்றி அகற்றப்பட்ட உதிரிப்பாகங்கள் அமைச்சின் களஞ்சியத்திற்கு கையளிக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.5 மனிதவள முகாமைத்துவம்

**அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரும் உள்ளபடியான பதவியணியினரும்**

2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் தொடர்பான நிலைமை பின்வருமாறு இருந்தன.

| ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| சிரேஷ்ட மட்டம் | 11 | 11 | - |
| மூன்றாம் மட்டம் | 02 | 01 | 01 |
| இரண்டாம் மட்டம் | 1216 | 1,029 | 187 |
| ஆரம்ப மட்டம் | 29 | 26 | 03 |
| மொத்தம் | 1258 | 1,067 | 191 |

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தினால் அங்கீகரிக்கப்பட்ட அமைச்சின் பதவியணியினர் 1,258 ஆக இருந்த போதிலும் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பதவியணியினர் 1,067 ஆக இருந்தது. அதன் பிரகாரம் பதவியணியினரில் 191 பற்றாக்குறை அவதானிக்கப்பட்டதுடன், அதில் 176 அதாவது 92 சதவீதம் அபிவிருத்தி உத்தியோகத்தர்களாக இருந்ததாக வெளிப்படுத்தப்பட்டது.
வெளிநாடுகளுக்கு செல்வதற்கு விண்ணப்பிக்கும் வீட்டுப் பணிப்பெண்களின் குடும்ப பின்னணி அறிக்கைகளைப் பெற்றுக்கொள்வது மற்றும் புலம்பெயர்ந்தோரின் நலன்புரி நடவடிக்கைகளை பிரதேச மட்டத்தில் தொடர்புபடுத்துவது அந்த உத்தியோகத்தர்களின் பிரதான செயற்பாடுகளாக இருந்தமையால் இவ்வெற்றிடங்கள் காணப்பட்டதன் காரணமாக அது அமைச்சின் செயற்பாடுகளுக்கு இடையூறாக இருந்தது.

(ஆ) மாவட்ட செயலகங்கள் மற்றும் பிரதேச செயலகங்களுக்கு அபிவிருத்தி உத்தியோகத்தர்களை இணைக்கும் போது 77 அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் வெற்றிடங்களாக இருந்த சந்தர்ப்பத்தில் 13 உத்தியோகத்தர்கள் மிகையாக வேறு பிரதேச செயலகங்களுக்கு இணைக்கப்பட்டிருந்தனர். அந்த உத்தியோகத்தர்களுக்காக 2016 சனவரி முதல் செப்தெம்பர் வரை சம்பளத்தை செலுத்துவதற்கு சுமார் ரூபா 3,684,330 செலவிடப்பட்டிருந்ததுடன், மிகையான ஊழியர்களை வெற்றிட எண்ணிக்கைகள் குறையக் கூடிய வகையில் ஈடுபடுத்துவதற்கும் ஏனைய நிர்வாக மாவட்டங்களுக்கு தொடர்புபடுத்துவதற்கும் அமைச்சின் கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை.